# தகன அறை முன்பதிவுச் செய்துகொள்ளுதல்

ஒரு நபர் உயிரிழந்த பின் அவரின் இறுதி கிரியைகளை மேற்கொள்வதற்கு தேவையான மயான இட வசதிகளை உள்ளூராட்சி மன்றங்கள்ால் வழங்கப்படும். சடலத்தின் இறுதி கிரியைகளை அடக்கம் அல்லது தகனம் செய்யப்படும்.

இந்த இறுதி கிரியைகளை மேற்கொள்வதற்காக உள்ளூராட்சிமன்றங்களின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும் .

அனுமதியைப் பெற்றுக்கொள்வது எப்படி?

01

இணையதளத்தின் ஊடாக அல்லது, சேவை கருமபீடத்தில் உள்ள இறுதி கிரியை தொடர்பான பதிவு புத்தகத்தை பார்வையிட்டு, அதன் வசதிக்கேற்ப திகதியையும் நேரத்தையும் அறிந்துகொள்ளுங்கள். இணையத்தளத்தில் தரவிறக்கப்பட்ட அல்லது சேவை கருமபீடத்தில் பெற்றுக்கொண்ட விண்ணப்பத்தை பூர்த்தி செய்து தேவையான இணைப்புகளோடு கருமபீடத்துக்கு ஒப்படையுங்கள்.

02

திடீர் மரணம் ஒன்று இடம்பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் சடலம் தொடர்பாக மரண பரிசோதனையின் பின் அந்த சடலத்தை தகனம் செய்ய பிரேத பரிசோதனையின் பின் திடீர் மரண பரிசோதகர் அல்லது குற்றவியல் நீதிமன்றத்தால் அனுமதி வழங்கி இருந்தால் மட்டுமே இந்த சடலத்தை தகனம் செய்ய ஏற்றுக்கொள்ள முடியும்.

03

வெளிநாட்டில் இடம்பெற்ற இறப்பென்றால் அந்த இறப்புச்சான்றிதழ் ஆங்கிலம் அற்ற வேறு மொழியில் எழுதப்பட்டிருக்கும் போது (உதாரணம்- அரபு மொழியில்)

04

தேவையான பணத்தை செலுத்திய பின் காசுக்கட்டளையொன்றும் தகனம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட பிரதியொன்றும் உங்களுக்கு கிடைக்கும்.
அதன் மற்றுமொரு பிரதி தகனத்தை மேற்கொள்பவருக்கு வழங்கப்படும்.

05

குறிப்பிட்ட நேரத்துக்கு அல்லது அதற்கு முன் தகனத்தை மேற்கொள்பவருக்கு ஒப்படைத்து அனுமதிப்பத்திரத்தின் பிரதியை அவருக்கு காட்ட வேண்டும்.

06

நீங்கள் அஸ்தியை கேட்டிருந்தால் அதைப்பெற்றுக்கொள்ள அதற்கு பொருத்தமான பாத்திரமொன்றை தகனத்தை மேற்கொள்பவருக்கு வழங்குங்கள். தகனப்பணி முடிந்தபின் அந்த வசதியை அவர் வழங்குவார்.

07

தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் பாரமெடுத்த பூதவுடலை தகனம் செய்ய முடியாமல் போனால் உள்ளூராட்சிமன்றத்திற்கு சொந்தமான வேறு ஒரு தகன அறைக்கு இணைக்க முடியும். உறவினர்களின் விருப்பத்திற்கு அமைய சபைக்கு சொந்தமான இடத்தில் அடக்கம் செய்யவும் முடியும்.



Funded by
European Union
STRIDE
CDLG
Capacity Development of Local Governments